பிராமண வாழ்க்கையின் சுவாசம் - சதா ஊக்கம் மற்றும் உற்சாகம்

இன்று மும்மூர்த்தி (திரிமூர்த்தி) சிவத் தந்தை அனைத்து குழந்தைகளையும் விசேஷமாக மூன்று சம்பந்தங்களில் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். அனைத்தையும் விட முதலாவது அன்பான சம்பந்தம் எதுவென்றால் சர்வ பிராப்திகளுடைய அதிகாரியின் வாரிசு ஆவீர்கள், வாரிசின் கூடவே ஈஸ்வரிய மாணவரும் ஆவீர்கள், கூடவே ஒவ்வொரு அடியிலும் பின்பற்றக் கூடிய, சத்குருவிற்கு அன்பானவர்களும் ஆவீர்கள். மும்மூர்த்தி சிவத்தந்தை குழந்தைகளுடைய இந்த மூன்று சம்பந்தங்களை விசேஷமாக பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். சர்வ சம்பந்தங்கள் வைப்பதன் அனுபவி ஆத்மாக்கள் ஆவீர்கள், ஆனால், இன்று விசேஷமாக மூன்று சம்பந்தங்களை பார்த்துக் கொண்டு இருக்கின்றார். இந்த மூன்று சம்பந்தங்கள் அனை வருக்கும் அன்பானது ஆகும். இன்று விசேஷமாக மும்மூர்த்தி (திரிமூர்த்தி) சிவஜெயந்தியைக் கொண்டாடுவதற்கான ஊக்கத்தோடு அனைவரும் ஓடோடி வந்திருக்கின்றீர்கள். தந்தைக்கு வாழ்த்துக்கள் கொடுப்பதற்காக வந்திருக் கிறீர்களா அல்லது தந்தையிடம் இருந்து வாழ்த்துக்கள் பெறுவதற்காக வந்திருக்கிறீர்களா? இரண்டு வேலையும் செய்வதற்கு வந்திருக்கிறீர்கள். பெயரே சிவஜெயந்தி அல்லது சிவராத்திரி ஆகும், எனில் மும்மூர்த்தி என்பது எதை நிரூபிக்கிறது? பிரஜாபிதா பிரம்மா மூலம் என்ன செய்கின்றார்? பிராமணர்களாகிய உங்களை படைக்கின்றார். அவர்களுடைய பாலனையும் பிறகு நடக்கிறது. எனவே, மும்மூர்த்தி என்ற வார்த்தை தந்தை யின் கூடவே பிராமணக் குழந்தைகளாகிய நீங்களும் துணையாக இருக்கின்றீர்கள் என்பதன் நிரூபணம் ஆகிறது. தந்தை தனியாக என்ன செய்வார்! ஆகையினால், தந்தையின் ஜெயந்தியே பிராமணக் குழந்தைகளாகிய உங்களுடைய ஜெயந்தியும் ஆகும். எனவே, தந்தை குழந்தை களுக்கு இந்த அலௌகீக தெய்வீக பிறப்பிற்கான மற்றும் இந்த வைரம் போன்ற ஜெயந்திக்கான பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டு இருக் கின்றார். உங்கள் அனைவருடைய வாழ்த்துக் கடிதம், அட்டை தந்தையிடம் வந்தடைந்து விட்டன. மேலும், இப்பொழுதும் கூட சில குழந்தைகள் உள்ளத்தால் வாழ்த்துக்களின் பாடல் பாடிக்கொண்டு இருக்கின்றார்கள், அவர்கள் தூரத்தில் இருப்பவர்களோ, எதிரில் இருப்பவர்களோ, எங்கிருந்தாலும் அவர்களின் வாழ்த்துப் பாடல் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. கைம்மாறாக பாப்தாதா வும் உள்நாடு, வெளிநாட்டைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் கோடான கோடி வாழ்த்துக் கள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

பிராமண வாழ்வில் எந்தவொரு உற்சவத்தையும் (திருவிழா) கொண்டாடுவது என்றால் சதா ஊக்கம், உற்சாகம் நிறைந்த வாழ்க்கையை உருவாக்குது என்பதாகும், இதை அனைத்து குழந்தை களும் அறிந்திருக்கின்றீர்கள். பிராமணர்களுடைய அலௌகீக டிக்ஷனரியில் (அகராதியில்) கொண்டாடுவது என்பதன் அர்த்தம் ஆகுவது என்பதாகும். எனவே, இன்று உற்சவத்தை மட்டும் கொண்டாடுவீர்களா? அல்லது சதா உற்சாகம் நிறைந்த வாழ்க்கையை

உருவாக்கப் போகிறீர்களா? இந்த ஸ்தூல சரீரத்தில் சுவாசம் இருக்கிறது என்றால் வாழ்க்கை இருக்கிறது என்று அர்த்தமாகும். ஒருவேளை, சுவாசம் முடிந்துவிட்டால் வாழ்க்கை என்ன ஆகும்? முடிந்துவிடும். அவ்வாறே, சதா ஊக்கம் மற்றும் உற்சாகம் - இதுவே பிராமண வாழ்க்கையின் சுவாசம் ஆகும். பிராமண வாழ்வில் ஒவ்வொரு நொடியும் ஊக்கம், உற்சாகம் இல்லையெனில் பிராமண வாழ்க்கையே இல்லை என்று அர்த்தம். சுவாசத்தின் நிலை கூட சாதாரணமாக இருக்க வேண்டும். ஒருவேளை, சுவாசத்தின் நிலை மிகவும் வேகமான தாக ஆகிவிட்டாலும் வாழ்க்கை யதார்த்தமாக இருக்காது மற்றும் மெதுவானதாக ஆகிவிட்டாலும் வாழ்க்கை யதார்த்தமாக உள்ளது என்று சொல்ல முடியாது. ஹை பிரஷர் (உயர் அழுத்தம்) அல்லது லோ பிரஷர் (குறைந்த அழுத்தம்) ஆகிவிடுகிறது அல்லவா. எனவே, இதை நார்மல் (இயல்பான) வாழ்க்கை என்று சொல்லப்படுவதில்லை. என்னுடைய பிராமண வாழ்க்கையினுடைய ஊக்க உற்சாகத்தின் நிலை நார்மலாக உள்ளதா? அல்லது சில நேரம் மிகவும் வேகமானதாகவும், சில நேரம் மிகவும் மெதுவானதாகவும் ஆகிவிடு கிறதா? ஒரே மாதிரியாக உள்ளதா? என்று இங்கேயும் சோதனை செய்யுங்கள். ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் அல்லவா. சில நேரம் அதிகமாகவும், சில நேரம் குறைவாகவும் இருக்கிற தென்றால் அது நல்லது இல்லை அல்லவா, ஆகையினால், சங்கமயுகத்தினுடைய ஒவ்வொரு நொடியும் உற்சவம் ஆகும். இதுவோ, விசேஷமாக பொழுதுபோக்கிற்காக கொண்டாடுகின்றீர்கள். ஏனெனில், பிராமண வாழ்வில் வேறு எங்கு சென்று மனோ ரஞ்ஜனத்தைக் (பொழுதுபோக்கை) கொண்டாடுவீர்கள்! இங்கே தானே கொண்டாடுவீர்கள்! விசேஷமாக கடற்கரைக்கோ அல்லது பூங்காவிற்கோ அல்லது கிளப்பிற்கோ (சங்கம்) செல்ல மாட்டீர்கள் அல்லவா! இங்கேயே கடற்கரையும் உள்ளது, பூங்காவும் உள்ளது மற்றும் கிளப்பும் உள்ளது. இந்த பிராமண கிளப் நன்றாக உள்ளது அல்லவா! எனவே, பிராமண வாழ்க்கையின் சுவாசமே ஊக்கம், உற்சாகம் ஆகும். சுவாசத்தின் நிலை சரியாக உள்ளது அல்லவா அல்லது அவ்வப்போது இறங்கி, ஏறுகிறதா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சோதனை செய்துகொண்டு இருக்கின்றார்கள். இதை (ஸ்டெதஸ்கோப்) காதுகளில் மாட்டி சோதனை செய்ய வேண்டியதில்லை. தற்சமயத்தில் விஞ்ஞானம் கூட அனைத்தையும் தானியங்கியாக உருவாக்கிவிட்டது.

சிவஜெயந்தி மற்றும் சிவராத்திரி இரண்டின் இரகசியத்தை நல்ல முறையில் அறிந்து கொண்டீர் கள் அல்லவா. இரண்டின் இரகசியத்தை தானும் அறிந்துகொண்டீர்கள் மற்றும் பிறருக்கும் கூட தெளிவாகச் சொல்ல முடியும், ஏனெனில், தந்தையின் ஜெயந்தியின் கூடவே உங்களுக்கும் ஜெயந்தி ஆகும். தன்னுடைய பிறந்த நாளின் இரகசியத்தை சொல்ல முடியும் அல்லவா. நினைவுச்சின்னத்தை பக்தர்களும் கூட மிகுந்த பாவனையோடு கொண்டாடு கின்றார்கள். ஆனால், வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் சிவராத்திரியில் ஒவ்வொரு வருடமும் விரதம் அனுஷ்டிக்கின்றார்கள், ஆனால், நீங்களோ பிக்னிக் செய்கின்றீர்கள். ஏனெனில், நீங்கள் அனைவரும் பிறந்ததுமே சதா காலத்திற்காக அதாவது சம்பூரண பிராமண வாழ்க்கைக்காக ஒருமுறை விரதத்தை தாரணை செய்துவிட்டீர்கள், ஆகையினால், அடிக்கடி செய்யவேண்டியதில்லை. அவர்கள் ஒவ்வொரு வருடமும் விரதம் அனுஷ்டிக்க வேண்டியதாக உள்ளது. பிராமண ஆத்மாக் களாகிய நீங்கள் அனைவரும்

பிறப்பெடுத்ததுமே நாங்கள் சதா தந்தைக்கு சமமாக சம்பன்னமாக மற்றும் சம்பூரணமாக இருப்போம் என்ற விரதத்தை எடுத்து விட்டீர்கள். இந்த விரதத்தை உறுதியாக எடுத்து விட்டீர்களா? அல்லது கொஞ்சம் உறுதியற்ற தாக உள்ளதா? எப்பொழுது ஆத்மா மற்றும் பரம ஆத்மாவினுடைய சம்பந்தம் அழிவற்றதாக உள்ளதோ, அப்பொழுது விரதமும் அழிவற்றதாக உள்ளது அல்லவா. உலகத்தினர் உணவு மற்றும் பானத்திற்கு மட்டும் விரதம் இருக் கின்றார்கள். இதன் மூலம் கூட என்ன நிரூபணம் ஆகிறது? நீங்கள் பிராமண வாழ்க்கையில் சதா காலத்திற்காக உணவு மற்றும் பானத்தினுடைய விரதம் எடுத்திருக்கிறீர்கள் அல்லவா. அல்லது எந்த உணவு, பானம் வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்ற சுதந்திரம் உள்ளதா? விரதம் உறுதியாக உள்ளதா அல்லது அவ்வப்போது களைப்பு வந்துவிடுவதால் விரதத்தை விட்டு விடுகிறீர்களா? எப்பொழுதாவது நேரம் கிடைக்கவில்லை எனில் என்ன சமைப்பது, எதையாவது வாங்கி சாப்பிட்டுவிடலாமா? கொஞ்சம் கொஞ்சம் தளர்த்தி விடுகிறீர்களா? பாருங்கள் உங்களுடைய பக்தர்கள் விரதம் அனுஷ்டித்துக்கொண்டு இருக்கின்றார்கள். வருடத்திற்கு ஒருமுறையேனும் அனுஷ்டிக் கின்றார்கள், ஆனால், நியமத்தை கடைப்பிடிக்கின்றார்கள் அல்லவா. உங்களுடைய பக்தர்கள் விரதத்தில் உறுதியாக உள்ளார்கள் எனில், நீங்கள் எவ்வளவு உறுதியாக இருக்கின்றீர்கள்? உறுதியாக இருக் கின்றீர்களா? நாளை போக் வைத்துக்கொள்ளலாம், இன்று வேண்டாம் என்று சில நேரங்களில் கொஞ்சம் தளர்த்திவிடுகின்றீர்கள். இது கூட பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய வாழ்க்கையின் எல்லையற்ற நினைவுச்சின்னம் உருவாகியுள்ளது.

விசேஷமாக இன்றைய நாளில் தூய்மைக்கான விரதமும் கடைப்பிடிக்கின்றார்கள். ஒன்று தூய்மையினுடைய விரதம் இருக்கின்றார்கள், இரண்டாவது உணவு மற்றும் பானத்தின் விரதம் இருக்கின்றார்கள், மூன்றாவது முழு நாளிலும் யாருக்கும் எந்தவிதமான துக்கத்தையோ அல்லது ஏமாற்றத்தையோ கொடுக்கமாட்டார்கள், இந்த விரதத்தையும் கடைப்பிடிக்கின்றார்கள். ஆனால், உங்களுடைய இந்த பிராமண வாழ்க்கையினுடைய விரதம் எல்லைக்கப்பாற்பட்டது ஆகும், அவர்களுடையது ஒரு நாளிற்கானது. தூய்மை யினுடைய விரதமோ பிராமண பிறப்பிலிருந்தே தாரணை செய்திருக்கின்றீர்கள் அல்லவா. வெறும் பிரம்மச்சரியம் மட்டும் இல்லை, ஆனால், ஐந்து விகாரங்களின் மீதும் வெற்றி அடைந்திருக்கின்றீர்கள், இதைத் தான் தூய்மையின் விரதம் என்று கூறுகின்றார்கள். ஆகவே, தூய்மையினுடைய விரதத்தில் எந்தளவு வெற்றி அடைந்திருக்கின்றீர் கள்? என்று சிந்தித்திடுங்கள். எவ்வாறு பிரம்மச்சரியம் அதாவது காமம் என்ற மகா எதிரியை வெற்றி அடைவதற்காக விசேஷமான கவனம் கொடுக்கின்றீர்களோ, அதுபோன்றே காமம் என்ற மகா எதிரியினுடைய மற்ற நான்கு துணைகள் மீதும் அந்தளவு கவனம் உள்ளதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கோபம் கொள்ளலாம் என்று அதற்கும் அனுமதி உள்ளதா? அனுமதி கிடையாது, ஆனால், தனக்குத்தானே அனுமதி கொடுத்துக் கொள்கின்றீர்கள். கோபத்தின் குழந்தை குட்டிகள் என்ன உள்ளனவோ, அவற்றிற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்பது பார்க்கப் படுகிறது, கோபம் என்ற மகா பூதத்தையோ விரட்டி விட்டீர்கள், ஆனால், குழந்தை குட்டிகள் என்ன உள்ளனவோ, அவற்றின் மீது கொஞ்சம் அன்பு இப்பொழுதும் வைத்திருக் கின்றீர்கள். எவ்வாறு சின்ன குழந்தைகளை

பிடிக்கிறது அல்லவா. இந்தக் கோபத்தின் சின்ன குழந்தைகளை சில நேரங்களில் பிடிக்கிறது. விரதம் என்றால் சம்பூரண தூய்மையின் விரதம். சில குழந்தைகள் மிகவும் நல்ல நல்ல விசயங்களை சொல்கின்றார்கள். கோபம் வரவில்லை, ஆனால், கோபப்படுத்து கிறார்கள், எனில் என்ன செய்வது? எனக்கு வரவில்லை, ஆனால், பிறர் கோபப்படுத்துகிறார்கள், என்று கூறுகின்றார் கள். மிகவும் வேடிக்கையான விசயங்களை சொல்கின்றார்கள். நீங்களும் கூட அந்த சமயத்தில் இருந்தீர்கள் என்றால் உங்களுக்கும் வந்திருக்கும் என்று கூறுகின்றார்கள். பாப்தாதா என்ன சொல்வார் கள்? நல்லது, உங்களை மன்னித்துவிடுகிறோம், ஆனால், மீண்டும் செய்யக்கூடாது என்று பாப்தாதாவும் சொல்கின்றார்கள்.

சிவராத்திரி என்பதன் அர்த்தமே இருளை அழித்து வெளிச்சத்தைக் கொண்டு வரக்கூடிய இராத்திரி என்பதாகும். மாஸ்டர் ஞானசூரியன் உதயமாகுவதே சிவராத்திரி ஆகும். நீங்களும் கூட மாஸ்டர் ஞான சூரியன் ஆகி விஷ்வத்தில் இருளை அழித்து ஒளியைக் கொடுப்பவர்கள் ஆவீர்கள். யார் விஷ்வத்திற்கு ஒளியைக் கொடுப்பவர்களோ, அவர்கள் சுயம் என்னவாக இருப்பார்கள்? சுயம் இருளில் இருக்கமாட்டார்கள் அல்லவா. நீங்கள் தீபத்தைப் போன்றவர்கள் இல்லை தானே? தீபத்திற்கு கீழே இருள் உள்ளது, மேலே வெளிச்சம் உள்ளது. நீங்கள் மாஸ்டர் ஞானசூரியன் ஆவீர்கள். மாஸ்டர் ஞான சூரியன் தானும் பிரகாச சொரூபமாக இருப்பார், ஒளி, சக்தி ரூபமாக இருப்பார், பிறருக்கும் ஒளி மற்றும் சக்தியை கொடுக்கக் கூடியவராக இருப்பார். எங்கு சதா வெளிச்சம் இருக்குமோ, அங்கு இருளிற்கான கேள்வியே இல்லை, இருள் இருக்கவே முடியாது. சம்பூரண தூய்மை என்றால் ஒளி என்று அர்த்தம். இருளை அழிக்கக்கூடிய ஆத்மாக்களிடம் இருள் இருக்க முடியாது. இருக்க முடியுமா? வரமுடியுமா? சரி, இருள் இருக்கவில்லை, ஆனால், வந்து விட்டு சென்று விடுகிறது, இவ்வாறு இருக்க முடியுமா? ஒருவேளை ஏதாவது ஒரு விகாரத்தின் அம்சம் உள்ளது என்றாலும் அதை வெளிச்சம் என்று சொல்லலாமா அல்லது இருள் என்று சொல்லலாமா? இருள் அழிந்துவிட்டது அல்லவா. சிவராத்திரியின் சித்திரம் கூட காண்பிக் கின்றீர்கள் அல்லவா. அதில் என்ன காண்பிக் கின்றீர்கள்? இருள் ஓடிக்கொண்டு இருக்கின்றதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் மீதம் உள்ளதா? இந்த சிவராத்திரியில் விசேஷ மாக என்ன செய்யப்போகிறீர்கள்? ஏதாவது செய்வீர்களா அல்லது கொடியை மட்டும் ஏற்றுவீர்களா? நாங்கள் இதை செய்யமாட்டோம், இதை செய்ய மாட்டோம் . . . என்று சதா உறுதிமொழி செய்கிறீர்கள். பிறகு, செய்தும் விடுகின்றீர்கள், இப்படி இல்லை தானே? உயிரே போகட்டும், ஆனால், உறுதி மொழியை மீறக்கூடாது என்பதே உறுதிமொழியின் அர்த்தம் என்று முன்பே சொல்லப் பட்டது. எதைத் தியாகம் செய்ய வேண்டியதாக இருந் தாலும், என்ன பேச்சு கேட்க வேண்டியதாக இருந்தாலும், உறுதிமொழியை மீறக்கூடாது. எந்தப் பிரச்சனையும் இல்லை, அப்பொழுது உறுதிமொழி சரியாக உள்ளது, ஒருவேளை, ஏதாவது பிரச்சனை வந்துவிட்டால் பிரச்சனை சக்திசாலி ஆகிவிடுகிறது மற்றும் உறுதிமொழி அதற்கு முன்னால் பலவீனம் ஆகிவிடுகிறது என்பது கூடாது. வாக்கு என்றால் வாக்கு. எனவே, அத்தகைய உறுதிமொழியை மனதார செய்ய வேண்டும், சொல்வதனால் செய்யக் கூடாது. சொல்வதனால் செய்பவர்கள் அந்த சமயத்தில் சக்திசாலியான சங்கல்பம் செய்வார்கள். சொல்வதனால் செய்பவர்களிடத்தில் சக்தி உள்ளது, ஆனால், சர்வசக்திகள் இல்லை. மனதால் உறுதிமொழி செய்கின்றீர்கள் மற்றும்

யாரிடம் உறுதிமொழி செய்திருக்கின்றீர்கள்? தந்தையிடம். தந்தையிடம் மனதால் உறுதிமொழி செய்வது என்றால் மனதை மன்மனாபவ என்று ஆக்குவதாகும் மற்றும் மன்மனாபவ என்ற மந்திரம் சதா எந்தவொரு சூழ்நிலையிலும் எந்திரம் ஆகிவிடுகிறது. ஆனால், மனதார செய்வதனாலேயே இது ஏற்படும். நான் இதை செய்யக்கூடாது என்பது மனதில் வரவேண்டும். ஒருவேளை மனதில் இந்த சங்கல்பம் வருகிறது - முயற்சி பண்ணலாம்; செய்து தானே ஆகவேண்டும்; ஆகத் தானே வேண்டும்; இவ்வாறு செய்யவில்லை என்றால் என்னவாகும்; என்ன செய்வது, ஆகையினால், செய்து விடலாம்... இதை கொஞ்சம் வலுக்கட்டாயமாக செய்வது என்று சொல்லப்படும். யார் மனதார செய்பவர்களாக இருப்பார்களோ, அவர்கள், செய்யத்தானே வேண்டும்... என்று நினைக்க மாட்டார்கள். அவர்கள், தந்தை சொல்லிவிட்டார் என்றால் அது நடந்துவிட்டது என்று நினைப் பார்கள். நம்பிக்கை மற்றும் வெற்றியில் உறுதி இருக்கும். இதுவே முதல் நம்பர் உறுதிமொழி ஆகும். ஆகத் தான் வேண்டும், எப்பொழுது ஆகுவேன் என்பது தெரியவில்லை - இது இரண்டாம் நம்பர் உறுதிமொழி ஆகும். (செய்யலாம், பார்க்கலாம்) இம்மாதிரியான. . .லாம், .. .லாம் என்று நிச்சயமில்லாமல் சொல்வது என்றால் கிளி போல் ஆகிவிட்டார்கள் அல்லவா. பாப்தாதாவிடம் ஒவ்வொருவரும் எத்தனை முறை உறுதிமொழி செய்திருக்கிறீர்கள், அந்த முழு ஃபைல் உள்ளது. ஃபைல் மிகவும் பெரியதாகிவிட்டது. இப்பொழுது ஃபைலை நிரப்பக் கூடாது, ஃபைனல் ஆக்க வேண்டும் (முடிக்க வேண்டும்). பாப்தாதாவிடம் யாராவது உறுதிமொழியினுடைய கடிதம் எழுதுகிறேன் என்று கூறு கின்றார்கள் என்றால் பாப்தாதாவிற்கு முன்னால் முழு ஃபைலும் வந்துவிடுகிறது. இப்பொழுதும் அப்படியே செய்யப்போகிறீர்களா? ஃபைலில் காகிதத்தை சேர்க்கப் போகிறீர்களா அல்லது இறுதியான உறுதிமொழி செய்யப் போகிறீர்களா?

உறுதிமொழி பலவீனமாக ஆகுவதற்கான ஒரு காரணத்தை பாப்தாதா பார்த்தார்கள். அந்த ஒரு வார்த்தை விதவிதமாக, இராயல் ரூபத்தில் வருகிறது மற்றும் பலவீனம் ஆக்குகிறது. அந்த ஒரு வார்த்தை தேக அபிமானத்தின் நான் என்பதாகும். இந்த நான் என்ற வார்த்தை தான் ஏமாற்று கிறது. நான் இதை புரிந்திருக்கிறேன், நான் தான் இதை செய்ய முடியும், நான் என்ன சொன்னேனோ, அதுவே சரி, நான் என்ன நினைத்தேனோ, அதுவே சரி. விதவிதமாக, இராயல் ரூபத்தில் வரும் இந்த நான் என்பது உறுதிமொழியை பலவீனம் ஆக்குகிறது. இறுதியில் பலவீனமாகி, நான் இவ்வளவு பொறுத்துக் கொள்ள முடியாது; நான் இந்தளவு முற்றிலும் பணிந்து போவது என்பது என்னால் முடியாது; இத்தனை பிரச்சனைகளைக் கடக்க முடியாது, அது கடினம் என்ற உள்ளச்சோர்வான வார்த்தைகளை யோசிக்கின்றார்கள். இந்த நான் என்பது பலவீனம் ஆக்குகிறது. மிகவும் நல்ல இராயல் ரூபமாக உள்ளது. தன்னுடைய வாழ்க்கையில் - இதே நான் என்பது சமஸ்காரத்தின் ரூபத்தில், சுபாவத்தின் ரூபத்தில், கருத்தின் ரூபத்தில், பாவனையின் ரூபத்தில், பேச்சின் ரூபத்தில், சம்பந்தம், தொடர்பின் ரூபத்தில் மற்றும் மிகவும் இனிமையான ரூபத்தில் வருகிறதா? என்பதை பாருங்கள். சிவராத்திரியில் இந்த நான் நான் (ஹிந்தியில் மே, மே) என்பதை பலி கொடுங்கள். பக்தர்கள் பாவம் ஆட்டை, நான் நான் என்று கத்தக்கூடியதை பலி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், கொடுக்க வேண்டியதோ இந்த நான் நான் என்பதைத் தான், இதை பலி கொடுங்கள். உங்களுடைய நினைவுச்சின்னத்தை வேறு ரூபத்தில் கொண்டாடிக் கொண்டு

இருக்கின்றார் கள். பலி ஆகிவிட்டீர்களா அல்லது இப்பொழுதும் நான் என்பதை பலி கொடுக்க வேண்டி யதில் கொஞ்சம் மீதம் இருக்கிறதா? ரிசல்ட் என்ன? உறுதிமொழி செய்ய வேண்டும் எனில் சம்பூரண உறுதிமொழி செய்யுங்கள். தந்தையிடம் அன்பு உள்ளது. அன்பில் அனைவரும் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். எவராவது தந்தையிடம் 75 சதவிகிதம் அன்பு உள்ளது, 50 சதவிகிதம் அன்பு உள்ளது என்று கூறுவீர்களா? அன்பிற்காக அனைவரும் 100 சதவிகிதத்தை விட அதிகமாக உள்ளது என்று கூறுவீர்கள். அனைவரும் அன்பு செலுத்தக்கூடியவர்கள், இதில் தேர்ச்சி பெற்றிருக் கிறீர்கள் என்று தந்தையும் கூறுகின்றார். அன்பில் தியாகம் செய்வது என்பது பெரிய விசயமா என்ன! எனவே, உறுதிமொழியை மனதார செய்யுங்கள் மற்றும் உறுதியாகச் செய்யுங்கள். உறுதிமொழி சக்திசாலியாக உள்ளதா அல்லது பரீட்சை சக்திசாலியாக உள்ளதா? என்று அடிக்கடி தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். ஏதாவது ஏதாவது பரீட்சை உறுதிமொழியை பலவீனம் ஆக்கிவிடுகிறது.

இரட்டை அயல்நாட்டினர் உறுதிமொழி கொடுப்பதில் புத்திசாலி தானே. துண்டிப்பதில் இல்லை, இணைப்பதில் புத்திசாலி ஆவீர்கள். பாப்தாதா அனைத்து இரட்டை அயல்நாட்டு குழந்தைகளுடைய பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். தந்தையை அறிந்து கொண்டீர்கள், இதுவே அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய அதிசயம் ஆகும். இரண்டாவது அதிசயம் - விதவிதமான விருட்சத்தின் கிளைகளாக இருக்கும்போதிலும் கூட ஒரு தந்தையின் சந்தன விருட்சத்தின் கிளைகள் ஆகிவிட்டீர்கள். இப்பொழுது ஒரே ஒரு விருட்சத்தின் கிளைகள் ஆவீர்கள். வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டு வந்து விட்டீர்கள். தேசம் வேறு, பாûஷ வெவ்வேறு, கலாச்சாரம் வெவ்வேறாக உள்ளது, ஆனால், நீங்கள் அனைவரும் வேற்றுமையை ஒற்றுமையாக ஆக்கிவிட்டீர்கள். இப்பொழுது அனை வருடைய கலாச்சாரம் எது? பிராமண கலாச்சாரம். எங்களுடைய வெளிநாட்டு கலாச்சாரம் இப்படி சொல்கிறது என்று ஒருபொழுதும் சொல்லக்கூடாது அல்லது எங்களுடைய பாரத கலாச்சாரம் இப்படி இருக்கிறது என்று பாரத வாசிகள் சொல்லக்கூடாது. பாரதமும் இல்லை, வெளிநாடும் இல்லை - பிராமண கலாச்சாரம். எனவே, வேற்றுமையில் ஒற்றுமை - இதுவே அதிசயம் ஆகும். வேறென்ன அதிசயம் செய்துள்ளீர்கள்? தந்தையினுடையவர் களாக ஆகியிருக்கிறீர்கள், ஆதலால், அனைத்து விதமான வெவ்வேறு பழக்கவழக்கங்கள், தினச்சரியம் போன்ற அனைத்தையும் கலந்து ஒன்றாக்கி விட்டீர்கள். அமெரிக்காவில் இருந்தாலும் சரி, இலண்டனில் இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி ஆனால், பிராமணர்களின் தினச்சரியம் ஒன்று தான். இல்லையென்றால், வெவ்வேறாக உள்ளதா? வெளி நாட்டின் தினச்சரியம் வேறு, பாரதத்தின் தினச்சரியம் வேறு என்பது இல்லை. அனை வருடையதும் ஒன்று தான். இந்த வேற்றுமையைத் தியாகம் செய்தது அதிசயம் ஆகும். என்னென்ன அதிசயம் செய்திருக் கிறீர்கள் என்பது புரிந்ததா? தந்தை அதிசயம் செய்து விட்டார் என்று தந்தையைப் பார்த்து பாடுகின்றீர்கள் அல்லவா. தந்தை பிறகு குழந்தைகள் அதிசயம் செய்துவிட்டார்கள் என்று பாடுகின்றார். பாப்தாதா பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். தந்தை மகிழ்ச்சி அடைகின்றார் மற்றும் குழந்தைகள் குஷியில் நடனம் ஆடுகின்றார்கள்.

நாலாபுறங்களிலும் உள்ள அயல்நாடு மற்றும் உள்நாட்டில் சேவையைப் பற்றி கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இருவரும் சேவையில் பந்தயம் செய்து கொண்டு இருக் கின்றீர்கள். நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்றாக நடந்தன, மேலும், நடந்து கொண்டே இருக்கும். இந்த திட சங்கல்பத்தை பயன்படுத்தி இருக்கின்றீர்கள் என்றால் வெற்றி அடைந்து இருக்கின்றீர்கள் என்று அர்த்தம். எந்தளவு திட சங்கல்பத்தை வெற்றியுடையதாக ஆக்கிக் கொண்டே செல்வீர் களோ, அந்தளவு வெற்றியை சகஜமாக அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். இது எப்படி ஆகும் என்று ஒருபொழுதும் சிந்திக்காதீர்கள். எப்படி என்பதற்குப் பதிலாக இப்படி ஆகும் என்று சிந்தியுங்கள். அசம்பவத்தை சம்பவமாக்குவது என்பது சங்கமயுகத்தில் விசேஷ வரதானமாகக் கிடைத்துள்ளது. எனவே, எப்படி என்ற வார்த்தை வரவே முடியாது. இது நடப்பது கஷ்டம் என்பது கிடையாது. இது நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற நம்பிக்கை வைத்துக்கொண்டு நடங்கள், நடைமுறையில் மட்டும் கொண்டு வர வேண்டும். இது திரும்ப நடைபெற வேண்டும். இது உருவாக்கப்பட்டது, உருவாக் கப்பட்டதை உருவாக்குவது என்றால் திரும்பச் செய்வது என்று அர்த்தம். இதையே சகஜ வெற்றிக் கான ஆதாரம் என்று சொல்லப் படுகிறது. திட சங்கல்பம் என்ற பொக்கிஷத்தை வெற்றி யுடையதாக்குங்கள், புரிந்ததா? என்ன நடக்கும்? எப்படி நடக்கும்? என்பது இல்லை. நடக்கும் மற்றும் சகஜமாக நடக்கும். எண்ணத்தில் தடுமாற்றம் ஏற்படுகிறது என்றால் அது வெற்றியைத் தடுமாற்றத்தில் கொண்டு வந்துவிடும். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள சதா உற்சவத்தைக் கொண்டாடக்கூடிய, சதா ஊக்க உற்சாகத் தில் பறக்கக் கூடிய, சதா சம்பூரண உறுதிமொழிக்குப் பாத்திரமான அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா அசம்பவத்தை சகஜமாக சம்பவம் ஆக்கக்கூடிய, சதா ஒவ்வொரு விதமான பரீட்சை யையும் பலவீனமாக்கி உறுதிமொழியை சக்திசாலி ஆக்கக்கூடிய, சதா பாபாவினுடைய அன்பிற்கு கைம்மாறாக எதையும் தியாகம் செய்வதற்கான தைரியம் கொண்டிருக்கக் கூடிய, அப்பேற்பட்ட திரிமூர்த்தி சிவத் தந்தையின் பிறவித் துணையான, பிராமண ஆத்மாக்களுக்கு அலௌகீக பிறந்த நாளினுடைய அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள். சிரேஷ்டமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் விசேஷமான நமஸ்காரம்.

வரதானம் : ஞானம், குணம் மற்றும் சக்திகள் என்ற பொக்கிஷங்கள் மூலம் சம்பன்ன நிலையின் அனுபவம் செய்யக்கூடிய சம்பத்திவான்ஆகுக.

எந்தக் குழந்தைகளிடம் ஞானம், குணம் மற்றும் சக்திகள் என்ற பொக்கிஷம் இருக் கின்றனவோ, அவர்கள் சதா சம்பன்னம் அதாவது திருப்தியாக இருப்பார்கள், அவர்களிடம் அபிராப்தியின் பெயர், அடையாளம் இருக்காது. எல்லைக்குட்பட்ட ஆசைகளைப் பற்றி அறியாதவர்களாக இருப்பார்கள். அவர்கள் வள்ளலாக இருப்பார்கள். அவர்களிடம் எல்லைக் குட்பட்ட ஆசை மற்றும் பிராப்திகளின் விருப்பம் தோன்றாது. அவர்கள் ஒருபோதும் யாசிக்கக் கூடிய பிச்சைக்காரராக ஆகமுடியாது. அப்படிப்பட்ட சதா சம்பன்னம் மற்றும் திருப்தியான குழந்தைகளைத் தான் சம்பத்திவான் (சகல செல்வங்களும் நிறைந்தவர்) என்று சொல்லப் படுகிறது.

சுலோகன்: அன்பில் சதா மூழ்கி இருந்தீர்கள் என்றால், உழைப்பினுடைய அனுபவம் ஏற்படாது.

குறிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சர்வதேச யோகதினம் ஆகும். இன்று மாலை 6.30 முதல் 7.30 மணி வரை சகோதர, சகோதரிகள் அனைவரும் யோகப் பயிற்சியில் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் இந்த சுப பாவனையை வைத்திடுங்கள் - அனைத்து ஆத்மாக் களுக்கும் நன்மை ஏற்படட்டும், அனைத்து ஆத்மாக்களும் சத்தியமான வழிப்படி நடந்து பரமாத்ம ஆஸ்தியின் அதிகாரத்தை அடையட்டும். நான் தந்தைக்கு சமமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தி, ஜீவன் முக்தியின் வரதானத்தைக் கொடுக்கக்கூடிய ஆத்மா ஆவேன்.